# தமிழ் இணையக் கல்விக்கழகம்

**TAMIL VIRTUAL ACADEMY - CHENNAI - 600 025**

**CERTIFICATE COURSE - MARK SHEET / Student Sheet**

**Level: Igaram (IM00) - இகரம்**

| | | | |
|---|---|---|---|
| **Centre Name** | | **Date** | |
| **Student Name** | தமிழில் :<br><br>**In English :** | **Registration No.** | |
| **Period** | **Jan-Feb ______/ July-Aug _____** | **Invigilator Name & Sign** | |

| **Title** | **Max. Marks** | **Obtained Marks** |
|---|---|---|
| **Written Mark /எழுத்துத் தேர்வு** | **75** | |
| **Online Mark / இணையவழித் தேர்வு மதிப்பெண்** | **25** | |
| **Total Mark / மொத்த மதிப்பெண்** | **100** | |

| Answer Paper Evaluator Name & Sign<br>விடைத்தாள் மதிப்பீட்டாளர் பெயர் & கையொப்பம் | Tamil Virtual Academy Authority Name & Sign<br>தமிழ் இணையக் கல்விக்கழக<br>அலுவலர் பெயர் & கையொப்பம் |
|---|---|
| | |

# ஜனவரி–பிப்ரவரி 2026

# இகரம் (IM00)

# எழுத்துத் தேர்வு (Written Examination)

**நேரம் : 2 : 00 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

---

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கான விடைகளையும் வினாத்தாளில் எழுதவும்.

*Note : Write the answers to all the questions in the question paper.*

## பகுதி –அ

## படித்தல் திறன்

**I. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**
**(Read the passage below and answers the questions)** **(5 x 1 = 5)**

**விண்வெளியில் இயற்கையாகவும் செயற்கையாகவும் கழிவுகள் காணப்படுகின்றன. இவற்றை விண்வெளிக் கழிவுகள் அல்லது விண்வெளிக் குப்பைகள் என்கிறோம். இவை காஸ்மிக் குப்பைகள் என்றும் அறியப்படுகின்றன. விண்கற்கள், எரிநட்சத்திரத் தூசுகள் ஆகியன இயற்கை விண்வெளிக் கழிவுகள். விண்ணுக்கு அனுப்பப்பட்டுச் செயலிழந்த செயற்கைக்கோள்கள், அவற்றின் உடைந்த பகுதிகள் ஆகியன செயற்கை விண்வெளிக் கழிவுகள் ஆகும். இக்கழிவுகள், விண்வெளியை மாசுபடுத்துகின்றன. விண்வெளி ஆய்வுக்கும் இவை அச்சுறுத்தலாக உள்ளன.**

**வினாக்கள் :–**

1. விண்வெளிக் கழிவுகள் என்றால் என்ன?

   ------------------------------------------------------------

2. விண்வெளிக் கழிவுகளைக் குறிப்பிடும் வேறு பெயர்களைக் கூறுக.

   ------------------------------------------------------------

3. விண்வெளிக் கழிவுகளின் வகைகள் யாவை?

   ------------------------------------------------------------

4. செயற்கை விண்வெளிக் கழிவுகளை யார் உருவாக்குகிறார்கள்?

   ------------------------------------------------------------

5. விண்வெளிக் கழிவுகளால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன?

   ------------------------------------------------------------

**II. கீழ்க்காணும் விளம்பரத்தினைக் கவனமாகப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (Read the advertisement below carefully and answer) (5 x 2 = 10)**




**வினாக்கள் :–**

1. ஓவியப் போட்டியின் தலைப்பு என்ன?

   ------------------------------------------------------------

2. ஓவியப் போட்டியில் இரண்டாம் பரிசுக்கான தொகை எவ்வளவு?

   ------------------------------------------------------------

3. தமிழ் இணையக் கல்விக்கழகத்தோடு இணைந்து ஓவியப் போட்டியை நடத்தும் துறை எது?

   ------------------------------------------------------------

4. ஓவியப் போட்டி எதை மையமாக வைத்து நடத்தப்படுகிறது?

   ------------------------------------------------------------

5. ஓவியப் போட்டி யாருக்கு நடத்தப்படுகிறது?

------------------------------------------------------------

## பகுதி –ஆ
## படிப்போம் பகுதி

**III. சரியா/தவறா என்பதைக் குறிப்பிடுக. (True or False) (5 x 1 = 5)**

1. ஷேக்ஸ்பியர் நாடகங்களில் பயன்படுத்திய சொற்கள் ஆங்கில அகராதியில் இடம்பெற்றுள்ளன. [சரி / தவறு]
2. தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகம் அகநானூறு. [சரி / தவறு]
3. அழகிய பொம்மைகளை உருவாக்குபவர் கைவினைக் கலைஞர். [சரி / தவறு]
4. ஹெலன் கெல்லரின் ஆசிரியர் ஆன் சல்லிவன். [சரி / தவறு]
5. உலக வனவிலங்கு நாள் ஆகஸ்ட் 3 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. [சரி / தவறு]

**IV. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (Choose the best answer) (5x1= 5)**

1. மக்களைக் குறிக்கும் திணை எது?
   - ○ அஃறிணை
   - ○ பலர்பால்
   - ○ ஒன்றன்பால்
   - ○ உயர்திணை

2. பார்வையற்றோருக்கான எழுத்து முறையை உருவாக்கியவர்
   - ○ அன் சல்லிவான்
   - ○ கெலன் கெல்லர்
   - ○ பிரெய்லி
   - ○ ஹென்றிக்

3. பறம்பு மலையை ஆண்ட மன்னர் யார்?
   - ○ பாரி
   - ○ பேகன்
   - ○ அதியமான்
   - ○ ஓரி

4. 'அசாமின் பெருமிதம்' என்று கருதப்படுவது
   - ஒற்றைத் தந்தம் யானை
   - இரட்டைக் கொம்பு காண்டமிருகம்
   - ஒற்றைக் கொம்பு காண்டமிருகம்
   - இரட்டைத் தந்தம் யானை
5. கடற்பயணம் மூலம் முதலில் உலகத்தைச் சுற்றி வந்தவர்.
   - வாஸ்கோடகாமா
   - மெகல்லன்
   - பார்த்தலோமியோ டயஸ்
   - கொலம்பஸ்

**V. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையை எடுத்து எழுதுக.**
**(Find the answers for the following questions) (5 x 1 = 5)**
**(வல்லபாய் பட்டேல், ஆறு, அசாம், ஈக்வலைஸர், அக்கோன்காகுவா)**

1. ஆண்டிஸ் மலைத்தொடரில் உயரமான மலை முகடாக இருப்பது ____________
2. ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகம் ____________ பெருமிதம்
3. பார்வையற்றோருக்கான எழுத்து முறை -------- புள்ளிகளைக் கொண்டது.
4. இந்தியாவின் இரும்பு மனிதர் ____________
5. ----------- என்ற கணினி நிரலியின் உதவியோடு ஸ்டீபன் ஹாக்கிங் பேசினார்.

## பகுதி –இ
## இலக்கணப் பகுதி

**VI. கோடிட்ட இடத்தை நிரப்புக. (Fill in the blanks)** **(5 x2 = 10)**

1. புலியின் இளமைப்பெயர் ----------------

   அ) புலிக்குட்டி ஆ) புலிக்கன்று இ) புலிப்பறழ் ஈ) புலிப்பிள்ளை

2. நம் முன்னோர்கள் ஒரு சொல்லை, சொல்லியவாறே நாமும் சொல்வது ----------------

   அ) சிறப்பு ஆ) புதுமை இ) மரபு ஈ) பழைமை

3. யானையின் இளமைப் பெயர் ----------------

   அ) கன்று ஆ) பறழ் இ) பிள்ளை ஈ) குருளை

4. மகிழனும் ஆதிமொழியும் தாத்தாவுடன் ------------------ சென்றனர்.

   அ) சுற்றுலா ஆ) கடற்கரை இ) உயிரியல் பூங்கா ஈ) திரையரங்கம்

5. ஆந்தையின் ஒலி மரபு ------------

   அ) அலறும் ஆ) கொக்கரிக்கும் இ) அகவும் ஈ) கூவும்

**VII. கோடிட்ட இடங்களை நிரப்புக. (Fill in the blanks)** **(5 x 2 = 10)**

(பேரும்புகழும், சாக்குப்போக்கு, அக்கம்பக்கம், வாடிவதங்கி, ஓடிஆடி)

1. நீரின்றிச் செடி ---------------- உள்ளது.
2. நல்ல உடல்நலம் வேண்டுமெனில் -------------------- வேலை செய்ய வேண்டும்.
3. கவினும் நவீனும் சாலையைக் கடக்க ---------------- பார்த்தனர்.
4. அறநூல்களுள் திருக்குறள் ------------------ பெற்றது.
5. பொன்னி விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளாமலிருக்க ---------- சொன்னாள்.

பகுதி –ஈ

செய்யுள் பகுதி

**VIII. விடுபட்ட சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (Fill in the Blanks) (5 x 2 = 10)**

**(I. குற்றமும் II. ஓம்புதல் III. தோன்றாமை IV. கசடறக் V. அப்பண்டம்)**

1. குணம்நாடிக் _________ நாடி அவற்றுள்
   மிகைநாடி மிக்க கொளல்.

2. பகுத்துண்டு பல்லுயிர் ______________நூலோர்
   தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

3. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
   தோன்றலின்___________ நன்று

4. கற்க_____________ கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

5. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் ______________
   சால மிகுத்துப் பெயின்.

பகுதி –உ

மொழி பெயர்ப்போம் பகுதி

**IX. பொருத்துக. (Match the following) (5 x 1 = 5)**

1. நீராவிஇயந்திரம் – Pendulum clock
2. ஊசல் கடிகாரம் – Pulse
3. தொலைநோக்கி – Thermometer
4. நாடித்துடிப்பு – Telescope
5. வெப்பமானி – Steam Engine

## பகுதி –ஊ

## படைப்பாற்றல் திறன்

**X. படம் பார்த்து 5 வரிக்கு மிகாமல் எழுதுக.**
**(Look at the picture and write a story in, not more than 5 lines.) (1 x 10 = 10)**



****************